**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்**

**பருத்தித்துறை கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம்**

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க மற்றும் 2011ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 15, றொக் ஹவுஸ் ஒழுங்கை இல. 15, எனும் முகவரியிலுள்ள இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலணைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2020.02.10 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 01 | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் | - | புதிய செயலகம், 4வது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10. |
| 02 | நகர சபை | - | பருத்தித்துறை |
| 03 | மாவட்ட செயலாளர் அலுவலகம் | - | யாழ்ப்பாணம் |
| 04 | பிரதேச செயலாளர் அலுவலகம் | - | வடமாராச்சி வடக்கு |
| 05 | கடற்றொழில்,நீரியல் வளங்கள் திணைக்களம் | - | மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம். |
| 06 | மத்திய சுற்றாடல் அதிகார சபை - | - | இல. 104, ‘‘பரிசர பியச’’ டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல. |

இந்த உத்தேச கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2020.02.10 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி
பணிப்பாளர் நாயகம்
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4வது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,கொழும்பு 10
தொலை பேசி இல. 011-2449754, 011-2387922, 011-2449197
தொலை நகல் இல. 011-2438005, 011-2472623.

| | |
|---|---|
| தலைவர், நகர சபை | நகர சபை பருத்தித்துறை |
| மாவட்ட செயலாளர் | மாவட்ட செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். |
| பிரதேச செயலாளர் | பிரதேச செயலாளர் அலுவலகம், வடமாராச்சி |
| உதவிப் பணிப்பாளர் | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,<br>மாவட்ட கடற்றொழில் அலுவலகம், யாழ்ப்பாணம். |
| பணிப்பாளர்,(சுற்றாடல் தாக்க மதிப்பீடு) | மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பத்தரமுல்ல |

ஐயா/ அம்மணி.

**யாழ்ப்பாணம், பருத்தித்துறை துறைமுக மறுசீரமைப்பு செய்வது சம்பந்தமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்.**

கொழும்பு 15, றொக் ஹவுஸ் ஒழுங்கை இல. 15, எனும் முகவரியிலுள்ள இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் பருத்தித்துறை துறைமுகம் மறுசீரமைப்பு செய்யும் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதியைக் கோரப்பட்டுள்ளது.

இந்த உத்தேச செயற்றிட்டத்துக்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாக செயற்றிட்டம் சம்பந்தமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை முறையாக சமர்ப்பிப்பதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை இந்த திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அறிக்கை பற்றி பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 2020.02.10 ஆந் திகதி தினமின, டெயிலி நியூஸ், தினகரன் ஆகிய நாளேடுகளில் மற்றும் 2020.02.10 ஆந் திகதிய அரசின் விசேட வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டியுள்ளதால், இத்துடன் அனுப்பப்படும் அறிக்கை 2020.02.10 ஆந் திகதி முதல் அரச வேலை நாட்கள் 30 நாட்களுக்கு உங்கள் அலுவலகத்தில் வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் இதனுடன் சமர்ப்பிக்கப்படும் குறிப்பு புத்தகத்தில் பொதுமக்களின் கருத்துக்களை எழுத்து மூலமாக பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாயின் மிக நன்றியுடையவனாக இருப்பேன்.

இங்ஙனம் - விசுவாசமுள்ள

**ஏ.எச். காமிணி ஹேவகே**
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ
பணிப்பாளர் நாயகத்துக்காக